இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3115** – கலைத்திட்ட கோட்பாடும் பிரயோகமும்

**காலம்:** மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி. 02.09.2008 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

பகுதி I இலிருந்து சகல வினாக்களுக்கும் விடைதருக. பகுதி II இலிருந்து யாதாயினும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. கலைத்திட்டம் என்பதற்கு உமது சுயமான வரைவிலக்கணத்தை தருக.

2. கலைத்திட்டமொன்றின் அத்தியாவசிய கூறுகள் நான்கினைப் பெயரிடுக.

3. கலைத்திட்டமொன்றினை வடிவமைக்கும்போது நோக்கங்களையும் குறிக் கோள்களையும் ஏன் முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.

4. கலைத்திட்ட திட்டமிடல் மற்றும் விருத்தியில் ஈடுபட வேண்டும் என நீங்கள் கருதும் ஐந்து முக்கியமான நபர்களைப் பெயரிடுக.

5. ஸ்கில் பேர்க்கின் கலைத்திட்ட மாதிரியின் மிக முக்கியமான அம்சங்களை விபரிக்குக.

6. கலைத்திட்ட மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான மூன்று நோக்கங்களைக் கூறுக.

7. "தற்போது எமது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட கணிப்பீட்டை தொடர்மதிப்பீடாக(Formative Evaluation) கருதமுடியும்." இந்நோக்கினை அதரிக்கும் வகையில் இரு காரணங்களைத் தருக

8. பின்வரும் தேர்ச்சிகளில் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

   (அ) தொடர்பாடல் தேர்ச்சிகள்
   (ஆ) கற்றலுக்காகக் கற்றல் தேர்ச்சிகள்.

(5 × 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. " பின்வருவன பாடசாலைக் கலைத்திட்டத்தின் மூன்று பிரதான பகுதிகளாகும்

   I. கற்பிக்கப்படும் முறைசார் பாடங்கள்
   II. இணைப்பாட விவேகச் செயற்பாடுகள்
   IV. மறைக் கலைத்திட்டம் " –

   பிள்ளையொன்றின் முழு விருத்தியில் இப்பகுதிகள் ஒவ்வொன்றும் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை ஆராய்க. (20 புள்ளிகள்)

10. I. டைலரின் கலைத்திட்ட மாதிரியை விபரித்து அதன் குறைபாடுகளை இனங்காண்க. (06 புள்ளிகள்)

II. இக்குறைபாடுகளை D.K. வீலரின் கலைத்திட்ட மாதிரியில் எவ்வாறு நீக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

III. இலங்கையின் தற்போதைய இடைநிலைக் கலைத்திட்டத்தில் எங்ஙனம் இவ்விரு மாதிரிகளும் இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்க.

(08 புள்ளிகள்)

11. I. "கற்றல் அனுபவங்கள்" என்ற எண்ணக்கருவை வலைவிலக்கணப்படுத்துக. (06 புள்ளிகள்)

II. கற்றல் அனுபவங்கள் மற்றும் கலைத்திட்ட உள்ளடக்கம் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

III. கலைத்திட்ட குறிக்கோளின் ஊடாக அடையக்கூடிய கற்றல் அனுபவங்களது ஐந்து பண்புகளை கூறுக. (08 புள்ளிகள்)

12. இலங்கையில் பாடசாலை கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பின்வருவனவற்றின் வகிபங்குகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

I. தேசியக்கல்வி நிறுவகம்
II. கல்வி வெளியீட்டுத்திணைக்களம்.
III. வலயக் கல்வி காரியாலயம்

(20 புள்ளிகள்)

13. கலைத்திட்டமொன்றை திட்டமிடும் போதும் வடிவமைக்கும் போதும் கவனத்திற் கொள்ள வேண்டிய உளவியல் அல்லது சமூகவியல் காரணிகள் நான்கினை விமர்சனரீதியாக ஆராய்க. (20 புள்ளிகள்)

14. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டிற்கு(02) சுருக்கக் குறிப்பெழுதுக.

I. இலங்கையின் 1972 கலைத்திட்டத்தின் முக்கிய பண்புகள்.

II. 2007ஆம் ஆண்டில் தேர்ச்சி மைய கலைத்திட்டத்தை அமுல் படுத்துவதின் முக்கியத்துவம்.

III. இலங்கையில் பாடசாலைமட்ட கலைத்திட்ட முகாமைத்துவம்

IV. கலைத்திட்ட உள்ளடக்கத்தின் குத்தான, கிடையான அமைப்புகள்.

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)